**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure )**
**--**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.**

| | | | |
|---|---|---|---|
| வழக்கு எண். | SC No.181/2022 | அரசுத்தரப்பு | P.W.3 |
| பெயர் | தர்மராஜ் | கிராமம் | |
| தந்தை / கணவர் பெயர் | நாகலிங்கம் | வட்டம் | |
| வயது | | மாவட்டம் | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 10.06.2025.
எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.
<u>**முதல் விசாரணை**</u>

நான் புதுக்கோட்டை மாவட்டம் திருக்கோர்ணம் கம்மாளர் தெரு, குண்டுபோடும்பாறையில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. 15.08.2021 தேதியில் நான் எனது வீட்டில் தூங்கிக்கொண்டிருந்தேன். காலையில் கதவை திறந்து பார்த்தபோது முத்துக்குமார் வீட்டின் முன்பாக பாட்டில் துகள்கள் உடைந்திருந்ததாகவும், ஆட்டுக்குட்டி ஒன்று எரிந்ததாகவும், கதவில் மாட்டியிருந்த ஸ்கிரின் துணி எரிந்திருந்ததாகவும் பின்னர் நான் தெரிந்து கொண்டேன். அங்கு கூட்டமாக இருந்தார்கள். நான் சென்று பார்த்தபோது அங்கு பாட்டில் உடைந்திருந்தருது. எனக்கு வழக்கு பற்றி ஒன்றும் தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். போலிசாரிடம் வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது என்று தான் சொன்னேன்.

அரசுதரப்பில் சாட்சியை பகுதியாக பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய கேட்டுக்கொண்டதன்பேரில் அனுமதி அளிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.

போலிசார் என்னை விசாரித்தபோது 15.08.2021 தேதியில் அதிகாலை சுமார் 2.45 மணியளவில் நான் எனது வீட்டு வாசலில் தூங்கிக் கொண்டிருந்தேன் எனவும், அப்போது எங்கள் வீட்டின் முன்பிருந்த கருப்பையாவின் வீட்டில் சத்தம் கேட்டதாகவும் நான் எழுந்து வந்து பார்த்தபோது எங்கள் ஏரியாவை சேர்ந்த சின்னமணியும், சின்னமணியின் நண்பர்கள் கருப்பசாமியும், கோழி விஜய்யும், நின்று கொண்டு ஒரு பாட்டிலை எடுத்து அது கருப்பசாமி தீயை வைக்க அதை சின்னமணி வாங்கி கருப்பயைாவின் வீட்டின் முன்பு தூக்கி எறிந்துவிட்டு என்னை பார்த்ததும், வேகமாக அவர்கள் வந்த splender plus இரு சக்கர வாகனத்தில் சென்று விட்டார்கள் என்றும் இதனை எனது வீட்டின் எதிரே வசிக்கும் ஆனந்தும் பார்த்துள்ளார் என்றும் அதன் பிறகு அவர்கள் எரிந்த

பாட்டிலின் நெருப்பு கருப்பையா வீட்டின் முன்பக்க கதவில் பட்டு தீ எரிய ஆரம்பித்தது என்றும் பிறகு கருப்பையா வீட்டில் உள்ளவர்கள் என்னிடமும், ஆனந்திடமும் அக்கம் பக்கம் உள்ளவர்களிடமும் அவர்களை பற்றி விசாரித்தார்கள் என்றும், அவர்கள் ஏற்கனவே தண்ணியடிச்சுட்டு பிரச்சனை செய்வார்கள் என்றும் இதை நாங்கள் பார்த்தோம் என்று அவர்களுக்கு நன்றாக தெரியும் என்றும் இதை நாங்க சொன்னா பிரச்சனை செய்வாங்க என்று சொல்லியும், சம்பவம் நடந்த தேதியன்று சொல்லாமல் பிரச்சனை வந்தால் பரவாயில்லை என்று கருப்பையா வீட்டில் எதிரிகளை பற்றி சொன்னோம் என்று போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளை காப்பாற்றுவதற்காக எதிரிகள் மீது அச்சம் கொண்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Sd/– தர்மராஜ்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.